**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.43/2020**

**PW7**

| | | |
|---|---|---|
| Name | : | ஏழுமலை |
| Father's Name | : | சேட்டு |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் கண்ணகந்தல் மதுரா, மோட்டூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் . அவர் எனது பக்கத்து நிலத்துக்காரர் . இவ்வழக்கில் இறந்துபோன ராஜு என் பக்கத்து நிலத்துக்காரர். சுமார் 7 வருடத்திற்கு முன்பு தேதி இல்லாத ஒருநாள் நான் மாமுலாக என் நிலத்தில் பால் கறக்க செல்வதுபோல் காலை 6.30 மணிக்கு சென்றேன். நான் என் நிலத்தில் இருந்தபோது கிழக்கு பக்கத்தில் இருந்து சத்தம் கேட்டது . அங்கு சென்று பார்த்தபோது ஊர்மக்கள் அங்கு இருந்தார்கள் . ராஜு வெட்டுபட்டு செத்துகிடந்தார். இது சம்மந்தமாக போலிசா என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

24.04.2018 அன்று அதிகாலை 5.30 மணிக்கு நெடுங்காவடி போகும் ரோட்டில் தனஞ்செழியன் நிலத்தின் அருகே சென்றுகொண்டிருந்தபோது எனக்கு எதிரே

ராஜி என்பவர் வந்துகொண்டிருந்தார் அவருக்கு பின்னால் அவர் மனைவி அமுதா என் பவர் வந்துகொண்டிருந்தார் . அப்போது அங்கு மறைந்திருந்த ஆஜர் எதிரி இரும்பு பைப்பால் ராஜுவை பின்பக்க தலையில் ஓங்கி அடித்தார்என்றும் , கீழே விழுந்த ராஜிவை கொடுவா கத்தியால் கழுத்தை வெட்டினார் என்றும் , தடுக்க வந்த அவர் மனைவியை ஆஜர் எதிரி முறைத்ததால் அவரும் உயிருக்கு பயந்து தூரமாக இருந்தார் என்றும், இந்த சம்பவத்தை நேரில் பார்த்த நான் தடுக்க சென்றபோது ஆஜர் எதிரி மிரட்டி விட்டு ஓடிவிட்டார் என்றும் , பின்னர் சென்று பார்த்தபோது ராஜுவை ரத்த காயத்துடன் கொலைசெய்யப்பட்டு இறந்துகிடந்தார் என்றும் , அக்கம்பக்கம் உள்ளவர்கள் ராஜுவின் உடலை சுற்றி சூழ்ந்து கொண்டார்கள் என்றும் , போலிஸ் விசாணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போய் பார்த்தபோது ராஜிவின் உடல் அருகே சுமார் 100 நபர்கள் இருந்தார்கள். நான் அங்கு சென்றபிறகு அங்கு தகவல் தெரிந்து அமுதா அங்கு வந்தாரா என்றால் நான் செல்வதற்கு முன்னர் அவர் அங்கு இருந்தார் . அங்கிருந்தவர்களுக்கு யார் வெட்டினார்கள் என்று தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.